உ

சிவ சிவ

# அன்புநெறி

மலர்-21 நவம்பர் 2016 இதழ்-4

$2.00



துய்யதோர் மறைகளாலுந்
துதித்திடற்கரிய செவ்வேள்
செய்ய பேரடிகள் வாழ்க சேவலும்
மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்புகீண்ட வேற்படை
வாழ்க வன்னான்
பொய்யில் சீரடியார் வாழ்க வாழ்க
விப்புவன மெல்லாம்.

– கந்தபுராணம் – கச்சியப்பர்



நல்லைநகர் ஆறுமுக நாவலரின்
மேன்மைகளைச்
சொல்வதெளி தாமோ துயர்போக்கி –
கல்வி தமிழ்
சைவ ஒழுக்கநெறி தாங்கி
வளர்க்க வந்த
தெய்வம் இவர்தாமே தேர்.

– வி. கந்தவனம்



தண்டமிழ்ப் புலமை யாளர் சரவண
முதலி யார்தாம்
புண்ணியப் பயனாய் ஞான சம்பந்தம்
புவியின் மேலாம்
திண்ணிய ஆய்வால் செஞ்சொல்
திறத்தினால் இலக்கி யத்தின்
நுண்ணிய கருத்துக் கூறும்
நூலறி புலவ ரானார்.

–சாந்தலிங்க இராமசாமி அடிகள்

# DR. S. RAVEENDRAN DENTISTRY PROFESSIONAL CORP.

## பல் மருத்துவ நிலையம்

### பல துறைகளில்

### இரு இடங்களில்

## டாக்டர் சபாபதி இரவீந்திரன்

BDS., MS, F D S R C S. (Eng.)

**MISSISSAUGA OFFICE**

(அதே இடத்தில் Hurontario & Dundas)

3025 Hurontario St., Suite 102

**(905) 270-7844**

**SCARBOROUGH OFFICE**

1139 Morningside Ave., Suite 25

(Morningside & Sheppard)

**(416) 283-9000**


## அன்புநெறி சந்தா விபரம்

தனிப்பிரதி **$2.00**

வருடச் சந்தா (12 இதழ்கள்) $20.00

அஞ்சல் பொதிச் செலவுடன் வருடச் சந்தா:-

| | |
|---|---|
| கனடா: | Can. $ 40.00 |
| அமெரிக்கா: | Can. $ 45.00 |
| ஏனைய நாடுகள்: | Can. $ 60.00 |


தொடர்புகட்கு: சைவசித்தாந்த மன்றம், கனடா

Saiva Sidhdhantha Manram, Canada

1008-50 Elm Dr. E. , Mississauga, ON, L5A 3X2 Canada

(Tel.: 905-566-4822)

உ
சிவ சிவ

# அன்புநெறி



| மலர் -21 | துர்முகி வருடம் ஐப்பசி–கார்த்திகை, நவம்பர் 2016<br>திருவள்ளுவர் ஆண்டு - 2047 | இதழ் -4 |
|---|---|---|


**பொருளடக்கம்** **பக்கம்**


1. பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் நூற்றாண்டு.... 4
2. சைவ நற்சிந்தனைகள்: –கலை . . 8
3. மாரன் அழிவும் குமாரன் அவதாரமும் . 10
4. நாவலர் பெருமை . . . . 17
5. சிற்பி சிவசரவணபவன்–சில நினைவுகள் . 18
6. பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே . . 21
7. சைவத்தை அறியுங்கள் . . . . 24
8. மன்றத்தில் நிகழ்ந்தவை. . . 26
9. என் நெஞ்சில் இடங்கொண்ட ஒரு பெரியர் . 27
10. திருக்குறள் சிந்தனைகள் . பின் அட்டையில்



**ஆசிரியர் :** திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம்
**நிர்வாக ஆசிரியர்:** திரு. தி. விசுவலிங்கம்
**உதவி ஆசிரியர்:** திருமதி அநிதா திருமுருகா
**வெளியீடு:** சைவசித்தாந்த மன்றம், கனடா

**திருமூல நாயனார்**
**குருபூசைநாள்: ஐப்பசி அச்சுவினி**

கூத்தன் கலந்திடும் கோல்வளை யாளொடும்
கூத்தன் கலந்திடும் கோதிலா ஆனந்தம்
கூத்தன் கலந்திடும் கோதிலா ஞானத்துக்
கூத்தனும் கூத்தியும் கூத்ததின் மேலே.

தேவரொ ஆடித் திருவம்பலத்தாடி
மூவரொடாடி முனிகணத்தோடாடிப்
பாவினுள் ஆடிப் பராசக்தியில் ஆடிக்
கோவிலுள் ளாடிடும் கூத்தப் பிரானே.

–திருமூலர்



**சைவ சித்தாந்த மன்றம், கனடா**
Saiva Sidhdhantha Manram, Canada 1008-50 Elm Dr. E.
Mississauga, ON L5A 3X2 Canada
Fax/Tel (905) 566-4822 Email:- saivamanram@gmail.com
Web.: www.saivasidhdhanthamanram.com

# பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா

(10-11-1916) - (10-11-2016)



சைவத்துக்கும் செந்தமிழுக்கும் வாழ்நாள் முழுவதும் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த முதுபெரும் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் (அ. ச. ஞா.) அவர்கள் 10-11-2016 இல் நூறாண்டு நிறைவு பெறுகிறார். அவர் 27-8-2002 இல் அமரராகி விட்டார். அ. ச. ஞா, ஐயா அவர்களின் நூற்றாண்டு விழாவை பேராசிரியரின் குடும்பத்தவர், சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னைக் கம்பன் கழகம், கொழும்பு கம்பன் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், அகில இந்திய வானொலி, சென்னைத் தொலைக்காட்சி, சாகித்திய அக்காதமி & நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, ஸ்ரீ கிருஷ்ணாஸ்விட்ஸ், இராமலிங்கம் அசோசியேட்ஸ் (வழக்கறிஞர்கள்) போன்ற நிறுவனங்கள் இணைந்து ஞாயிற்றுக்கிழமை நவம்பர் 13, 2016 காலை 9:50 மணி முதல் இந்தியன் ஆபீசர்ஸ் அசோசியேஷன் மண்டபத்தில் (இராயப்பேட்டை, சென்னை-600 014) நடத்த உள்ளார்கள்.

பேராசிரியர் அ. ச. ஞா. ஐயா அவர்கள் இருபது, இருபத்தொராம் நூற்றாண்டுகளில் இலக்கியத் துறையிலும், சமயத் துறையிலும் இமயமாகத் திகழ்ந்த தமிழ் மாமுனிவர். அ. ச. ஞா. ஐயா அவர்கள் சொல்லேர் உழவரும் அறநெறிச் செம்மலுமாகிய பெருஞ்சொல் விளக்கனார் அ. மு. சரவணமுதலியார் அவர்களின் திருமகனாக கருவிலே திருவுடையவராய் வளர்ந்தவர். தந்தையாரிடம் அறிவு வளர்ச்சியும், தாயாரிடம் ஆன்மீக வளர்ச்சியும் பெற்றார். அவர் ஒரு புலமைக் களஞ்சியம். அவர் தமிழோடு, ஆங்கிலம், வடமொழி என்பனவற்றில் புலமை மிக்கவர். இயல்பியல், கணிதம், வரலாறு என்பன படித்தவர். எதனையும் புதியநோக்கில் காணும் ஆராய்ச்சித் திறம் பெற்றவர். அவர் சிறு வயதிலேயே மேடை ஏறியவர். தம் மேடைப் பேச்சால் இலங்கை, மலேசியா,

சிங்கப்பூர், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் சொற்பொழிவு நிகழ்த்தி தமிழுக்கும், சைவத்துக்கும் தமக்கும் பெருமை சேர்த்துக் கொண்டவர்.

அவர் சிறந்த பேராசிரியர், எழுத்தாளர், சொற்பொழிவாளர், சிந்தனையாளர், திறனாய்வாளர், பண்பாட்டறிவாய்வாளர் ஆகிய பல நிலைகளில் இருந்தவர். நுண்மாண் நுழைபுலம் கொண்ட அ. ச. ஞா. ஐயா அவர்கள் முப்பத்தைந்து நூல்களையும், பல நூற்றுக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியவர். தமிழில் "திறனாய்வுத் துறையின் தந்தை" என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர்.

அ. ச. ஞா ஐயா அவர்கள் சங்ககால இலக்கியங்கள், ஐம்பெருங் காப்பியங்கள், பன்னிரு திருமுறைகள், திவ்வியப் பிரபந்தங்கள் ஆகட்டும், பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்க வள்ளலார், மகாகவி சுப்பிரமணிய பாரதி, பாரதிதாசன் போன்றோரரின் சமய இலக்கியப் படைப்புகள் அல்லது வடமொழி மந்திரங்கள், ஆங்கில இலக்கியப் படைப்புகள் ஆயினும் பல மணி நேரங்கள் மட்டுமல்ல, பல நாட்கள் கூட அறிவார்ந்த முறையில் பேசும் வல்லமை கொண்டவர். அவரது பேச்சாற்றல் கேட்போரை பிணித்துப் பதுமைகளாய் வீற்றிருக்கச் செய்யும். எடுத்துக் காட்டும் கவிதையின் செஞ்சொற் கவி இன்பத்தை அவையோர் உணருமாறு அவர் நயம்பட விரித்துரைக்கும் திறன் அவரது ஆழ்ந்த புலமையைக் காட்டும். அ. ச. ஞா. ஐயா அவர்களின் சொற்பொழிவைக் கேட்டபின் பல புத்தகங்களை நாமே படித்த உணர்வு உண்டாகும். இப்பண்பினை நோக்கும் போது கச்சியப்பர் தனிப்பாடல் ஒன்றினைக் குறிப்பிடல் அவசியமாகும்.

"நின்கவி கேட்டார் தமிழ்ப் புலமை பெறுவர்
நாரேனும் பூவால் நறுமணமாம்; நின் கவிதை
ஆரேனும் கேட்கில் அவர்க்கும் தமிழ் வரும் காண்."

இக்கவியிலுள்ள நலம் அ.ச.ஞா. வின் புலமைக்கு ஒப்பானதாகும்.

ஒரு முறை யாழ்ப்பாணத்தில் அ. ச. ஞா. அவர்கள் மாலை 6:00 மணிக்குப் பேச வேண்டியதாக இருந்தது. ஆனால் அன்று காலை அவரது தொண்டை அடைத்துக் கொண்டது. பேச்சு வெளிவரவில்லை. மருத்துவர்கள் கைவிரித்து விட்டார்கள். யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சிவயோக சுவாமிகளிடம் சென்றார். "மேடைக்குப் போ, பேச்சுத் தனாக வரும்" என்று யோகர் சுவாமிகள்

ஆசி வழங்கி அனுப்பினார். அன்று மாலை வழக்கமான கணீரென்ற வெண்கல ஒலியில் பேசி முடித்தார். அன்றிலிருந்து என்றென்றும் தன் குரல் வளம் "யோக சுவாமிகள் தந்த பிச்சை" என யோக சுவாமிகளை நினைவுகூர்ந்து போற்றுவார். அதே போல "சின்னையா" என்று தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாணசுந்தரனார் அவர்களையும், "குருநாதர்" என்று திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களையும் தம்முடைய வாழ்நாள் முழுவதும் போற்றி மகிழ்ந்தார்.

திரு. வி. க. அவர்கள் அ. ச. ஞா வைப் பற்றி எழுதுகையில் "சரவண முதலியார் ஒரு சைவத் தமிழ்க் கடல். அக்கடலினின்றும் பிறந்த கற்பகம் ஞானசம்பந்தம். ஞானசம்பந்தர் கலைஞர் பலதிறப் பொருள் பற்றியும் பேசுவர். எழுதுவர். அதனால் அவரைக் கற்பகம் என்கிறேன்.

ஞானசம்பந்தர் பேச்சு, தமிழ்ப் பேச்சு. அப்பேச்சுக்களிடைச் சீர்திருத்தம் நுழையும். அஃது எனக்கு மகழ்ச்சியூட்டும். ஞானசம்பந்தர் இயற்கையில் விஞ்ஞானி. அவர் தம் தந்தையார் விரும்பியவாறு 'தமிழ்' எடுத்தார் என்று கேள்வியுற்றேன்; சிறிது வருந்தினேன். தமிழ் மீது எனக்கு எவ்விதக் காழ்ப்புமில்லை. ஞானசம்பந்தர் தமிழில் பட்டம் பெற வேண்டுவதில்லை. ஞானசம்பந்தர் உள்ளம் பளிங்கு. அவர் உள்ளத்தில் மறைப்பே கிடையாது.

ஞானசம்பந்தர் என் தலைமையில் பலதிறப் பொருள் பற்றிப் பேசியுள்ளார். அவற்றுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கது திருவாசகத்தைப் பற்றியது. திருவாசகத்தை அவர் விஞ்ஞானக் கண்கொண்டு பார்க்கிறார். சீர் திருத்த உள்ளங் கொண்டு நோக்குகிறார். அக்கால மாணிக்கவாசகரை இக்காலத்தவராகக் காட்டுகிறார். ஞானசம்பந்தர் வாயிலாகத் திருவாசகத்துக்கு ஒரு விரிவுரை வெளிவரின் தமிழ் உலகம் நலம் பெறுவதாகும் என்று யான் நம்புகிறேன்."

கண்பார்வை இழந்த நிலையில் திரு. வி. க. வின் விருப்பத்தை நிறைவேற்றுமுகமாக, மாணிக்கவாசக சுவாமிகளின் "திருவாசகம் சில சிந்தனைகள்" என்று ஐந்து பகுதி நூல்களை எழுதி அன்பர்களின் சிந்தனையைச் சிவன்பாலும் திருவாசகத்தின் பாலும் தூண்டியுள்ளார்.

தன் தந்தையாருக்குப் பிரியமான பெரிய புராணத்தை தந்தையாருக்குச் சிறப்புச் செய்யும்படியாக எழுதி வெளியிட்ட பெரியபுராண உரைப்பதிப்பு, பெரியபுராண ஆராய்ச்சி என்ற நூல்கள் அவர் பெயரை என்றும் நினைவு கூரும். தேசிய இலக்கிய

மானதும் வாழ்வியல் காப்பியமானதுமான பெரிய புராணத்துக்கு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தச் சேக்கிழார் ஆராய்ச்சி மையம் என்ற அமைப்பை இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தோற்றுவித்து ஆண்டுதோறும் விழா எடுத்து, ஆண்டுக்கு ஆண்டு வளரச் செய்தார்.

பல சிறப்புக்களும் விருதுகளும் பெற்ற பெரியார் அ. ச. ஞா. ஐயா அவர்களுக்கு இறைவன் மங்கலச் சிறப்புகள் நிறைந்த நல்வாழ்க்கைத் துணைவியாரையும், நன்மக்களையும், பண்பும் அறிவும் சேர்ந்த பேரப்பிள்ளைகளையும் அளித்து அவரது குடும்பமே நல்லதொரு பல்கலைக்கழகமாக விளங்கும்படி அருளியுள்ளார்.

திருஞானசம்பந்தப் பெருமானது மொழிப்புரட்சி, சமயப் புரட்சி என அவரின் அருமை பெருமைகளை விளக்குவதில் பெரியார் அ. ச. ஞா விற்கு நிகர் அவரே. திருநெறிய தமிழ் வல்லவர் "தொல்வினை தீர்த்தல் எளிதாமே" என்ற மறைமொழிக்கு ஏற்ப திருமுறைச் சிறப்பை விளக்கி ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்குவது சிவநெறியாகிய அன்புநெறி என்பதை அவை தோறும் முழங்கியவர்.

"பிறப்புஎன்னும் பேதமை நீங்கச் சிறப்புஎன்னும்
செம்பொருள் காண்பதே அறிவு" (குறள் 358)

என்ற அய்யன் திருவள்ளுவரின் குறள்வழி வாழ்ந்தவர்.

**அன்புநெறி**யில் அவரின் நூல்களில் இருந்து கட்டுரைகள் வெளியிட அனுமதி கேட்டு 1999 ஆம் ஆண்டு கடிதம் எழுதி இருந்தேன், அவர் அமெரிக்காவில் வதியும் தனது மகள் திருமதி அன்புச்செல்வி அப்புலிங்கம் மூலம் ஆசியையும், தன் கட்டுரைகளை வெளியிட அனுமதியையும் தெரிவித்து, அவ்வாறு வெளிவருவது தனக்கு மகிழ்ச்சியைத் தரும் எனவும் தெரிவித்திருந்தார்.

யூலை 2001 இல் சென்னை அசோக் நகரில் உள்ள அவரின் இல்லத்திற்கு மனைவியும் நானும் எனது அண்ணருமாகக் காலையில் சென்றிருந்தோம். எங்களை அன்போடு வரவேற்று உபசரித்து, திருநீறு இட்டு ஆசி வழங்கினார். அன்றையதினம் அவரின் பாரியார் திருமதி இராசம்மாள் ஞானசம்பந்தன் அவர்களின் பிறந்தநாள். அவர்கள் வழிபாடு செய்து முடித்த பின்னர் பெரியார் அ. ச. ஞா அவர்கள் திருநீறும் திலகமும் இட்டு வாழ்த்திய காட்சியைத் தரிசித்தோம். அன்புநெறி திங்கள் இதழ் பற்றி பலவும் அன்புடன் கலந்துரையாடி, அன்புநெறி என்றும் நின்று


நிலவவேண்டும் என்று வாழ்த்தி ஆசி கூறி வழி அனுப்பிய அவர்கள் இருவரினதும் காட்சியை நினைவுகூரும் பொழுது கண்ணீர் பனிக்க வைக்கிறது.

அன்புநெறி அருட்செல்வர் முதுபெரும் பேராசிரியர் பெரும் பொருள்விளக்கனார் அ. ச. ஞானசம்பந்தர் அவர்களின் புகழ் என்றும் வாழ்க. அவர் ஆய்ந்து சிந்தித்து வழங்கிய நூல்கள் சைவத் தமிழ் உலகிற்கு என்றும் வழிகாட்டுவனவாகும்.

சிவசிவ

**குறிப்பு:** முதுபெரும் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தனார் வாழ்வும், தொண்டும், அவர் ஆற்றிய சொற்பொழிவுகள், அவர் நூல்கள் என்பன போன்ற இன்னோரன்ன தகவல்கள் எடுத்து வரும் **இணையத்தளம்** ஒன்றினை அவரின் மக்களும் நண்பர்களும் தருகிறார்கள். எல்லோரும் பார்த்து, படித்து, கேட்டு உணர்ந்து இன்புற வேண்டும். – ஆசிரியர் தி. வி.

www: aasagnanasambandan.com



## சைவ நற்சிந்தனை

(பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்)

### கலை

கலை என்றால் என்ன? சற்றே சிந்திப்போம்.

உலகத்தின் வியத்தகு தோற்றங்களைக் கவிஞர்கள் காவியங்களிலும், ஓவியர்கள் ஓவியங்களிலும், சிற்பிகள் சிலைகளிலும் அமைக்க முயலுகின்றார்கள். அந்த முயற்சிகள் முற்றுப் பெறாமல் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அந்த வளர்ச்சிகள் கலைச் சமுத்திரத்தில் எழுகின்ற அலைகளாயிருக்கும்.

மலை அடுக்கங்கள்–அருவிகளின் வீழ்ச்சிகள்–கடற் பரப்புக்கள்– வான வளைவுகள்–சந்திர சூரிய உதய அஸ்தமனங்கள்– சோலைகள் – என்று இன்னோரன்னவைகளை நேரிற் கண்டு பலர் களிக்கின்றார்கள்; இன்பந் துய்க்கின்றார்கள்.

இங்ஙனமாகக் கவிஞர்கள் முதல் நேரிற் கண்டு களிப்பவர் பரியந்தம், இங்கே குறிப்பிட்டவர்கள் எல்லாம், கலை அநுபவம் படைத்த கலைஞர்கள் என்று கருதப்படுகின்றார்கள்; மனச் சாந்தி படைத்தவர்கள் என்று நினைக்கப்படுகின்றார்கள்.

கலைஞர்கள் மனிதர்களுக்குள் அதிமனிதர்கள்; மதிப்புக்கு உரியவர்கள். ஆனால் அவர்களிடமும் கவலை குடிகொண்டு விடுகின்றது. கலைஞர்கள் தம்பால் அணுகுகின்றவர்களைத் தமது கலைப் பொக்கிஷங்களாற் களிக்க வைக்கின்றார்கள். ஆயினும், சில சமயங்களில், கலைஞர்களுங் கவலை கொள்ளுகின்றார்கள். ஒரு தந்திக்காரன் வேகமாக வருகின்றான். அவனைக் கண்டதுங் கலைஞர்களுங் கலங்கி விடுகின்றார்கள். கலையுங் கவலைக்கு இடமானதா? உண்மைக்கலை என்றால் என்ன?

நமது நிழல் வளர்ந்து நீளுகின்றது. பின் அவ்வாறே குறைந்து ஒடுங்குகின்றது. குறிப்பிட்ட காலத்தில் எல்லாருடைய நிழலும் வளர்ச்சியிலும் ஒடுக்கத்திலும் ஓர் அளவைக் கொண்டிருக்கிறது. நீண்ட மனிதன் தன் நிழல் தனது அடியால் பத்தடி என்கின்றான். அதே சமயம் குறுகிய மனிதனும் தன்னிழல் தன்னடியால் பத்தடி என்கின்றான்.

கலை என்ற தத்துவத்துக்கு மேலே காலம் நியதி என்ற இரு தத்துவங்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட காலத்தில் ஒரு நியதிக்குட்பட்டு நிழல் வளர்வதும் தேய்வதும் போலவே பல்வேறு விசித்திரமான உலகத் தோற்றமும், ஒரு நியதிக்குட்பட்டே வளருகின்றது; ஒடுஙகுகின்றது. அந்த நியதி யாது? அதுதான் திருவருட் குறிப்பு; சிவசத்தியின் திருவிளையாட்டு. அது நீதி மயமானது. நீதி மயமான நியதிப்படி உலகந் தோன்றி நின்று ஒடுங்குகின்றது. நியதியான திருவருட்குறிப்பை உணர்ந்தவர்கள், உலகத் தோற்றத்தைக் கண்டு மகிழ்வது போலவே உலகம் ஒடுங்கும் முறையில் ஒடுங்குவதையம் கண்டு களிக்கின்றார்கள்; நீதியாகிய நியதியை வியக்கின்றார்கள்.

நியதியை உணர்ந்தவர்கள் கல்யாண வீடு போலவே அந்தியகாலச் சடங்குகளையும் காணுகின்றார்கள். அபிமந்யுவுடன் இறக்க முயல்கின்றான் அவன் தந்தையாகிய அருச்சனன்; மாமனான கண்ணன் அப்படிச் செய்யவில்லை. அபிமந்யுவின் தோற்ற வளர்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்தது போலவே, அபிமந்யுவின் ஒடுக்கத்திற்கும் மகிழ்கின்றான் கண்ணன். அபிமந்யு இந்த உலக பந்தங்களை உதறிக்கொண்டு உயர்நிலை உறுவதைக் கண்டு களிகூருகின்றான் அந்தக் கண்ணன். கண்ணன் நியதி என்ற தத்துவத்தை நன்கு தெரிந்தவன்.

கண்ணீர் வடித்துக் கலங்குகின்றான் அர்ச்சுனன். கண்ணில் நீரே வராமல், கலக்கமின்றி இருக்கின்றான் கண்ணன். இந்த இருவரில் யாவன் பரிபூரண கலைஞன்! கலை என்றால் என்ன?!

# மாரன் அழிவும் குமாரன் அவதாரமும்



(தமிழ்ப் பேரறிஞர் வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன்)

உயிர் இறைவனைப் பற்றிய வரலாறுகள் பல புராணாங்களில் காணப்படுகின்றன. அவற்றைப் படிக்கும் பொழுது கதைச் சுவை ஓரளவு இருந்தாலும் சில இடங்களில் உள்ளவை ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாகத் தோன்றும். புராணங்களை வெறும் கதைகளாக மாத்திரம் படித்தால் அதில் நமக்குச் சுவை இராது. அவற்றின் ஊடே உள்ள தத்துவங்களைத் தெரிந்து கொண்டால் அப்பொழுதுதான் அவற்றின் பெருமை நன்கு விளங்கும்.

ஒரு தத்துவத்தை அப்படியே எடுத்துச் சொன்னால் அதில் சுவை தோன்றாது. அதைக் காவியமாவோ கதையாகவோ புனைந்து சொன்னால் அதில் மனம் செல்லும்; ஆர்வம் உண்டாகும். புராணங்கள் சிறு குழந்தைகளுக்குச் சொல்லும் கதைகளைப் போன்ற அமைப்பை உடையன; அதனால் அவற்றைச் சிசு சம்ஹிதை என்று வடமொழியில் சொல்வார்கள். ‘‘சத்தியம் பேசு’’ என்று மாத்திரம் சொன்னால் அது கேட்கப் பிடிப்பதில்லை. அதை ஒரு கதையில் வைத்துச் சொன்னால் சுவை பிறக்கிறது. சத்தியத்துக்காகவே ஒருவன் வாழ்ந்து, எத்தனை தடை வந்தும் சத்தியத்தையே பேசினான் என்று அரிச்சந்திரன் கதையைச் சொன்னால் காது கொடுத்துக் கேட்போம். சத்தியம் பேசு என்பது சாத்திரம். வேதமும் அப்படியே சொல்லுகிறது. அதையே அரிச்சந்திரன் கதையாகப் புராணம் சொல்கிறது. முதலிலே சொன்னது வெறும் தத்துவம், பின்னாலே சொன்னது அந்தத் தத்துவத்தை உள்ளடக்கிய கதை. குழந்தைகளுக்குக் கதை சொல்லுவது போலப் புராணங்களை நம்முடைய பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; திருவருளைத் துணையாகக் கொண்டு சொல்லியிருக்கிறார்கள்.

இறைவன் செய்தருளிய திருவிளையாடல்களைப் புராணங்கள் சொல்லுகின்றன. சில இடங்களில் முரண்பாடு இருப்பது போலத் தோன்றும். சிவபெருமானைப் பற்றிய கதைகள் பல. அவற்றுள் சிவபெருமான் காம சங்காரம் பண்ணினான் என்று ஒரு கதை வருகிறது. இறைவனுடைய மனத்தைக் கலைப்பதற்காகத் தன்னுடைய மலர் அம்புகளுடனும் கரும்பு வில்லுடனும் காமன் வந்தான். வந்தவுடன் தன் நெற்றிக் கண்ணைத் திறந்து சிவபெருமான் பார்த்தார்.

அதனால் காமன் எரிந்தான் என்பது கந்தபுராணத்தில் வரும் கதை. அதற்குப் பின்பு இறைவன் தன்னுடைய நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு பொறிகளை உண்டாக்க, அந்த ஆறு பொறிகளும் சேர்ந்து சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகள் ஆயின. அந்த ஆறு குழந்தைகளும் ஒன்றாகச் சேர்ந்து முருகன் என்ற ஒரு மூர்த்தியாக ஆயின. இதுவும் கந்தபுராணத்தில் உள்ள வரலாறே.

காமனை எரித்தான் சிவபெருமான் என்பதும், அவன் ஒரு குழந்தையைப் பெற்றான் என்ற செய்தியும் ஒன்றுக்கொன்று முரண்பாடு போலத் தோன்றுகின்றன. முருகன் சிவபெருமானுக்குக் குழந்தை. உலகில் ஆணும் பெண்ணும் கலந்து இல்வாழ்க்கை நடத்தும்பொழுது அவர்களுக்குக் குழந்தை பிறக்கிறது. குழந்தை பிறப்பதற்கு முன்னாலே ஆணுக்கும் பெண்ணுக்கும் காதல் உண்டாகிறது; காம நுகர்ச்சியை அடைகிறார்கள். அதன் பயனாகக் குழந்தை பிறக்கிறது. ஆனால் இறைவனோ காமத்தைக் கடந்தவன். காம நுகர்ச்சியினால் அவனுக்குப் பிள்ளை பிறந்தது என்று சொல்லுவது பொருந்தாது. அதைத்தான் புராணம் நுட்பமாகத் தெரிவிக்கிறது.

மற்றவர்கள் மாரனுடைய ஏவலினாலே காமநுகர்ச்சி பெற்று குமாரனை அடைவார்கள். சிவபெருமானோ மாரனுடைய ஏவல் பலிக்காமல் அவனை அழித்தார்; அதற்கு அப்பால் குமாரன் பிறந்தான். குமாரனுடைய ஜனனம் மாரனுடைய முயற்சியினாலே வந்த ஜனனம் அன்று; ஞானத்தின் விளைவாக வந்த ஜனனம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒரு திருப்பதிகத்தில் இந்த இரண்டு செய்திகளையும் ஒரு சேர வைக்கிறார்.

சோழ நாட்டில் உள்ள கலயநல்லூர் என்ற ஊருக்கு அவர் போனார். வழக்கம் போல அங்கே இருக்கின்ற இறைவனைத் தரிசித்தார்; தரிசித்துப் பதிகம் பாடினார். அதில் ஒரு பாட்டில் இந்த இரண்டு செய்திகளையும் ஒருங்கே வைத்திருக்கிறார். முருகனை இறைவன் அவதரிக்கச் செய்தான். அப்பெருமான் அவதாரம் செய்வதற்குக் காரணம் என்ன? தேவர்களுக்குரிய பொருள்களை எல்லாம் அசுரர்கள் வவ்விக் கொண்டு அவர்களை அடிமைப்படுத்தி விட்டார்கள். இந்திரன் கற்பகத்தோடும் காமதேனுவோடும் வாழ்ந்திருந்த வளவாழ்வை இழந்தான். அவன் எங்கோ போய் மறைந்து கொண்டான். அவனுடைய பிள்ளையாகிய சயந்தனை அசுரர்கள் சிறை வைத்து விட்டார்கள். இந்திராணியும் எங்கோ ஒடுங்கிக் கிடந்தாள். தேவர்களின் வாழ்வு குலைந்து போயிற்று.

இந்த நிலையில் தேவர்கள் யாவரும் சென்று இறைவனிடம் முறையிட்டுக் கொண்டார்கள். இறைவன் பார்த்தான் "நாம் எத்தனையோ திருவிளையாடல்களைச் செய்திருக்கிறோம். நாமே முருகனாக அவதாரம் செய்வோம்" என்று நினைத்தான். தன்னுடைய ஐந்து முகத்தோடு அதோ முகமாகிய ஒன்றையும் சேர்த்து ஆறுமுகநாதனாக எழுந்தருளினான்.

தானே தந்தையாகவும் தானே பிள்ளையாகவும் இருக்கும் நிலை இறைவனுக்கு உண்டு. நம் இயல்புக்கும் இறைவனுடைய இயல்புக்கும் வேறுபாடு உண்டு. தந்தை, பிள்ளை, மனைவி என்று இறைவனோடு சார்த்திச் சொல்லுகின்ற உறவு முறை உலகிலுள்ள மக்களின் உறவு முறையைப் போன்றது அல்ல. அது தத்துவத்தோடு சார்ந்த கருத்துடையது.

தானே தந்தையாகவும் தானே குழந்தையாகவும் இறைவன் தோன்றினான். குழந்தையாகத் தோன்றினபோது முருகன் ஆனான். எதற்காக அவ்வாறு தோன்றினான்? தேவர்கள் அனைவரும் பிரார்த்தனை செய்துகொள்ள. அவர்களுடைய இடுக்கண்களைத் தீர்த்து அசுரர்களைக் கொன்று மீண்டும் அவர்களுக்குரிய பதவியைத் தருவதற்காகத்தான் முருகன் திரு அவதாரம் செய்தான். அந்த அசுரர்களில் தாருகன் என்பவன் ஒருவன். அவன் ஆனைமுகம் உடையவன். அவனை முருகன் திருஅவதாரம் செய்து கொன்ற செய்தியைச் சுந்தரமூர்த்தி நாயனார் முதலிலே நினைக்கிறார். பலவகையான பலத்தை உடைய அசுரன் அவன். அவனைப் பொருது கொன்று உலகத்துக்கு இன்பத்தைத் தந்த பெருமான் முருகன். அந்த முருகனைத் திருஅவதாரம் செய்யும்படி செய்தவன் சிவபெருமான்.

பொரும்பலம் துடைஅசுரன் தாருகனைப் பொருது
பொன்றுவித்த பொருளினைமுன் படைத்து உகந்த புனிதன்

முருகனைப் படைத்து உகந்த புனிதன் இறைவன். முருகனுடைய திருஅவதாரத்தால் யாவருக்கும் இன்பம் உண்டாவதனால், திருஉள்ளங் களித்தான் ஆண்டவன்.

இறைவன் குழந்தையைப் பெற்றது காம உணர்ச்சியினாலே விளைந்த செயலா? அவன் காமனையே வென்ற பெருமான் அல்லவா?

கரும்புவிலின் மலர்வாளிக் காமன்உடல் வேவக்
கனல்விழித்த கண்ணுதலோன்

கரும்பை வில்லாகவும் ஐந்து மலர்களை வாளியாகவும் கொண்டு, தன்னுடைய ஆணையை உலகத்தில் எங்கும் செலுத்தி வெற்றி பெறுகின்ற காமனுடைய உடலம் வெந்து பொடியாகும்படியாக, தன்னுடைய கனல் விழியை திறந்த நெற்றிக்கண்ணை உடையவன் ஆண்டவன்; காமனை எரித்தவன். அவனுக்குக் குமாரன் பிறந்தான்; அது காமத்தின் விளைவினாலே வந்தது அல்ல, மாரன் அழிந்த பிறகு குமாரன் தோன்றினான். மாரனுடைய மரணமும் குமாரனுடைய ஜனனமும் அடுத்தடுத்து நிகழ்ந்தன. காமத்தை அழித்து வீழ்த்துகின்ற ஞானமே திருஉருவாக முருகன் எழுந்தருளினான்.

அசுரர் என்றும் சுரர் என்றும் வேறு பிரித்துச் சொல்கின்ற இரண்டு சாதிகளும் இரண்டு வகையான குணங்களைக் காட்டுகின்றன. மனிதர்களுடைய உள்ளத்தில் தேவ சம்பத்து, அசுர சம்பத்து என்ற இரண்டு வகையான குணங்கள் இருக்கின்றன. அந்த இரண்டு குணங்களுக்கும் எப்பொழுதும் போர் நடந்து கொண்டே இருக்கிறது.

எப்பொழுது தீய சக்திகளுக்கும் நல்ல சக்திகளுக்கும் போர் உண்டாகிறதோ அப்பொழுதெல்லாம் தேவாசுர யுத்தம் நடப்பதாகத்தான் கொள்ள வேண்டும். ஒவ்வொருவனுடைய மனமும் போர்க்களமாக இருக்கிறது. அந்த மனத்தில் தோன்றுகிற தீய எண்ணங்கள் நல்ல எண்ணங்களை அழிப்பதற்கு முயலுகின்றன. இறைவனுடைய திருவருள்இருந்தால் நல்ல எண்ணங்கள்வெல்லுகின்றன. இல்லா விட்டால் தீய எண்ணங்கள் மேல் ஓங்கி நிற்கின்றன. புராணத்தில் வரும் போர்கள் இதைத்தான் நமக்கு நினைவூட்டுகின்றன.

ஞானமே உருவானவனாகிய முருகன் அவதாரம் செய்தான். அஞ்ஞானத்தின் மயமாயிருந்த தாருகன், சூரன் முதலிய அசுரர்கள் இறந்து ஒழிந்தார்கள் முருகன் ஞான வடிவினன் என்பதை

''நீயான ஞான விநோதந் தனை என்று நீயருள்வாய்''

என்று அருணகிரிநாதர் சொல்வதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். சிவகுமாரனுடைய ஜனனம் மனித குமாரர்களுடைய ஜனனத்தைப் போன்றது அன்று. ஞானத்தின் விளைவாக வந்த திருஅவதாரம் அது. ஞானத்துக்குத் தடையாக இருக்கிற காமன் அழிந்த பிறகே குமாரன் எழுந்தருளினான்; அவதாரம் செய்தான். அவதாரம் செய்து அஞ்ஞானத்தின் உருவங்களாக இருந்த தாருகன் முதலியவர்களைப் பொருதான். மார தகனமும் குமார ஜனனமும் ஆருயிர்களுக்கு அஞ்ஞானம் காமம் முதலியவற்றைப் போக்கும்

ஞானத்தையும், இன்பத்தையும் தருகிறவன் இறைவன் என்ற கருத்தையே புலப்படுத்துகின்றன.

பொரும்பலம் துடைஅசுரன் தாருகனைப் பொருது
பொன்றுவித்த பொருளினைமுன் படைத்து உகந்த புனிதன்
கரும்புவிலின் மலர்வாளிக் காமன்உடல் வேவக்
கனல்விழித்த கண்ணுதலோன்.

(போரிடுகின்ற வலிமையை உடைய அசுரனாகிய தாருகனை எதிர்த்து அவனை அழியச் செய்த மகனாகிய முருகனை முன்பு தோற்றுவித்து மகிழ்ந்த தூய பெருமான், கரும்பு வில்லையும் மலர் அம்புகளையும் உடைய காமனது உடம்பு வேகும்படியாகத் தீயாக விழித்த நெற்றிக் கண்ணை உடையவன்.

பொரும் – போரிடும், பொன்றுவித்த –இறக்கச் செய்த, பொருள்– பிள்ளை, புனிதன்–தூயவன், விலின்– வில்லின், விகாரம். வாளி– அம்பு, கனல் விழித்த – நெருப்புத் தோன்ற விழித்த, கண் நுதலோன் –கண்ணை நெற்றியில் உடையவன்.)

தலத்தைப் பற்றிய வருணனை பின்பு வருகிறது.

எம்பெருமான் உலகிலுள்ள மக்களை எல்லாம் பாதுகாக்க வேண்டும் என்று கருதி, சர்வாந்தர்யாமியாக இருந்தாலும் மூர்த்தியாகப் பல தலங்களிலே எழுந்தருளியிருக்கிறான். நாம் விரும்பியதனால் அப்படி எழுந்தருளி இருக்கவில்லை. உலகிலுள்ள ஆருயிர்களைக் காக்க வேண்டும் என்று தானே திருவுள்ளத்தில் கொண்டு விரும்பி எழுந்தருளியிருக்கிறான். அவ்வாறு எழுந்தருளியுள்ள ஊர்கள் பல 'அவற்றில் இப்போது கூறப்புகும் ஊர் யாது?' என்று கேட்டால் சுந்தரர் விடை கூறுகிறார்.

கண்ணுதலோன் கருதும் ஊர் வினவில்

என்று ஆரம்பிக்கிறார்.

கலயநல்லூர் சோற்று வளம் நிரம்பிய சோழநாட்டில் இருப்பது. நீர் வளமும் நில வளமும் நிறைந்தது சோழநாடு. எங்கே பார்த்தாலும் காவிரியின் நீர் பரவி வளம் படுத்தும் நாடு. காவிரியிலிருந்து பிரிந்த பல ஆறுகள் அங்கங்கே பாய்ந்து வயல்களை ஊட்டுகின்றன. அத்தகைய ஆறுகளில் அரிசில் ஆறு என்பது ஒன்று. அந்த ஆற்றின் தென்கரையில் கலயநல்லூர் இருக்கிறது. அவ்வாற்றில் நீர்வளம் எத்தகையது? வெண்மையான அலைகளை வீசிக் கரைகளை மோதிக் கொண்டு வருகிறது ஆறு. குடகு

மலையிலிருந்து வருகிற காவிரியின் கிளை அது. மலைகளையும் காடுகளையும் கடந்து வரும் பொழுது இடையிலே விளையும் பொருள்களைத் தன்னுடைய திரைக் கைகளாலே ஏந்திக் கொண்டு வருகிறது. காவிரி நதி; ஏலம் இலவங்கம் முதலியவற்றைத் தாங்கி வருகிறது. அவை அரிசிலாற்றிலும் நீரோடு வருகின்றன. இரண்டு கரைகளிலும் அவற்றை வீசுகின்றது.

இரும்புனல் வெண் திரைபெருகி ஏலம்இல வங்கம்
இருகரையும் பொருது அலைக்கும் அரிசில்

(மிக்க வெள்ளத்தின் வெண்மையான அலைகள் பெருகி, ஏலத்தையும் இலவங்கத்தையும் இரண்டு கரைகளிலும் மோதி அலையச் செய்யும் அரிசில் ஆறு.)

அரிசிலின் நீராலே நீராலே வளம் பெறுகின்ற ஊரின் இயல்பு எப்படி இருக்கிறது?

அவ்வூரில் எங்கே பார்த்தாலும் பொழில்கள் நிரம்பி இருக்கின்றன. பொழில்களில் பலவகை மரங்கள் வானளவும் உயர்ந்து வளர்ந்து நிற்கின்றன. வேறு நிலங்களில் வளரும் மரங்களும் இங்கே வளர்கின்றன. நெய்தல் நிலத்தில் வளரும் புன்னை மரங்களை இங்கே காணலாம். அந்தப் புன்னையின் அடி மரம் கன்னங்கரேலென்று இருக்கிறது. அதன் பூவில் வெள்ளை, சிவப்பு, மஞ்சள் ஆகிய மூன்று நிறங்களும் உள்ளன. அதன் இதழ்கள் எல்லாம் வெள்ளையாக இருக்கும். கேசரங்கள் பொன்னிறம் பெற்றிருக்கும். அந்தக் கேசரங்களுக்கு நடுவில் முட்டை வடிவம் போன்ற ஓர் உறுப்புச் சிவப்பாக இருக்கும். இதழ்கள் எல்லாம் மூடிக்கொண்டு அரும்பாக இருக்கும் பொழுது பார்த்தால் புன்னையின் மொட்டு முத்தைப் போலத் தோன்றும். கரும்புன்னை வெண்முத்து அரும்புகிறது. பின்பு மலர்கிறது. அப்போது அதனுடைய கேசரங்கள் எல்லாம் தோன்றுகின்றன; அவை பொன்னிறம் பெற்றிருக்கின்றன.

முத்தாக அரும்பிப் பொன்னாக மலர்கிறது கரும்புன்னை. கேசரங்களுக்கு நடுவிலே உருண்டையாகவும், சிவப்பாகவும் ஓர் உறுப்பு இருக்கிறது. பொன்னுக்கு நடுவில் பவளத்தைப் பதித்தது போன்ற காட்சியைத் தருகிறது அது. கரும்புன்னை வெண்முத்தை அரும்பிப் பொன் மலர்ந்து பவளத்தின் அழகைக் காட்டுகிறது. புன்னையின் மலர் நல்ல மணத்தை உடையது. வேறு மண மலர்களும் பொழிலில் இருக்கின்றன. எல்லாம் சேர்ந்து கம்மென்று மணக்கும் கடி பொழில்கள் கலயநல்லூரில் மிகுதியாக உள்ளன.

கரும்புனை வெண்முத்து அரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின் காட்டும் கடிபொழில்சூழ் கலயநல்லூர் காணே.

( கரிய புன்னை மரம் வெண்முத்தைப் போல் அரும்புகளை விட்டுப் பொன்னைப் போல மலர்ந்து பவளத்தின் அழகைக் காட்டும் மணம் நிறைந்த சோலைகள் சூழ்ந்த கலயநல்லூர்.

புனை–புன்னை, கவின்–அழகு, கடி–நறுமணம், காண். ஏ: அசை, வினவில், காணே என்றும் கூட்டிப் பொருள் கொள்ளலாம்.)

காமத்தைப் போக்குகின்ற பெருமான், அஞ்ஞான உருவமாகிய தாருகனை அழிக்க ஞான உருவாகிய முருகனைத் தோற்றுவித்த புனிதன். நீர்வளமும் நிலவளமும் பொருந்திய திருக்கலய நல்லூரில் எழுந்தருளி இருக்கிறான்.

பொரும்பலம் துடைஅசு ரன் தாருகனைப் பொருது
பொன்றுவித்த பொருளினைமுன் படைத்து உகந்த புனிதன்
கரும்புவிலின் மலர்வாளிக் காமன்உடல் வேவக்
கனல்விழித்த கண்ணுதலோன் கருதும் ஊர் வினவில்
இரும்புனல் வெண் திரைபெருகி ஏலம்இல வங்கம்
இருகரையும் பொருது அலைக்கும் அரிசில்
கரும்புனை வெண்முத்து அரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின் காட்டும் கடிபொழில்சூழ் கலயநல்லூர் காணே

(7–16–9)

கலயநல்லூர் என்பது கும்பகோணத்துக்கு அருகில் இருக்கிறது. இப்போது சாக்கோட்டை என்று வழங்குகிறது.

பொன்னானை மயிலூர்தி **முருகன் தாதை**
பொடியாடு திருமேனி நெடுமாறன் முடிமேல்
தென்னானைக் குடபாலின் வடபாலின் குணபாற்
சேராத சிந்தையான் செக்கர்வான் அந்தி
அன்னானை அமரர்கள்தம் பெருமானைக் கருமானின்
உரியானை அதிகைமா நகருள்வாழ் பவனை
என்னானை எறிகெடில வடவீரட்டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன்போல் யானே.
–சுந்தரர்



# நாவலர் பெருமை

பண்டிதர் இ. நமசிவாயதேசிகர்

1. சிவமதமும் தமிழ்மொழியுங் செகத்தினிடை சிவந்தொளிரப்
புவிபரவும் பரசமயம் புகலகன்று முழுதொளிரத்
தவருளமு மிகமலரத் தைவிகத்தி னாலுதித்த
நவிலருஞ்சீ ராறுமுக நாவலர்சீர் வாழியவே.

2. தூயதமி ழிலக்கணமுஞ் சுவைதவழு மிலக்கியமும்
பாயசிவமதநூலும் பகர்தருக்க நூலுமெலா
மாயுமுணர் வினிற்சோதித் தச்சேற்றி யுலகளித்த
நாயகமா ராறுமுக நாவலர்சீர் வாழியிவே.


3. எல்லோரு மினிதுணர வியற்சொல்லி னவையகற்றித்
தொல்லோரு மறியாத துய்யதமிழ் வசனநடை
நல்லூழி னெமக்களித்த நாவலர்க்கு ணன்மணியாம்
நல்லூரி லாறுமுக நாவலர்சீர் வாழியவே.

4. காட்டாற்றி னொழுக்குடைத்தாக் கருதுபொருட் செறிவாலே
கேட்டாரைப் பிணிப்பதுவாக் கிளந்தநவ சுவையுடைத்தாப்
பாட்டாக்கு நாவன்மை படைத்தழியாப் புகழெல்லா
நாட்டார்க்கு மாறுமுக நாவலர்சீர் வாழியிவே.

5. பொய்யாது புரிகின்ற புலவரெலா நலிவெய்த
மெய்யாது புகன்று பொருள் மிளிர்தருக்க நெறிகாட்டி
எய்யாத விழற்சிங்க மெனச்சபையி னிருந்தோங்கும்
பொய்யாத நாவலர்சீர் புவியின்மிசை வாழியிவே.

**நன்றி:** நாவலர் மாநாடு விழா மலர் (1969)
நல்லூர் – யாழ்ப்பாணம்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, கொழும்பு

(**குறிப்பு:** அமரர் அதிபர் சி. சிவசரவணபவன் (சிற்பி) அவர்கள் 09–11–2015 இல் இறைபதம் அடைந்து ஓராண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது. சிற்பி அவர்கள் **கலைச் செல்வி** என்னும் இலக்கிய இதழின் ஆசிரியராகப் பல ஆண்டுகள் பெரும் பணியாற்றியவர். சிவத்திரு சி. சரவணபவன் அவர்கள் யா/வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபராயிருந்து ஓய்வுபெற்றபின் சைவபரிபாலன சபையின் வெளியீடான **இந்துசாதனம்** சைவசமய மாத இதழின் ஆசிரியராக சில ஆண்டுகள் அரும்பணி ஆற்றியவர். –ஆசிரியர் தி. வி.)



# ‘சிற்பி’ சிவசரவணபவன்-சில நினைவுகள்



கலாபூஷணம் பொ. சண்முகநாதன்

மூதறிஞர் – மூத்த எழுத்தாளர் – கேட்டார்ப் பிணிக்கும் தகைய இலக்கியச் சொற்பொழிவாளர், ‘சிற்பி’ சிவசரவணபவன் 2015 நவம்பர் 09ஆம் நாளன்று கொழும்பில் காலமானார். அவரது இறுதிக் கிரியைகள் அடுத்த நாளன்று — தீபாவளித் தினமன்று அவரது வாழ்விடமான கந்தரோடையில் நடைபெற்றது. இறக்கும்போது அவருக்கு வயது எண்பத்திரண்டு.

சிற்பி அவர்களுடன் சேர்த்துச் சொல்லப் படுகின்ற இன்னொரு பெயர் ‘கலைச்செல்வி’ சஞ்சிகையாகும். 1958 – 1966 காலப் பகுதியில் கலைச்செல்வி மூலம் பல எழுத்தாளர்களை உருவாக்கித் தந்த பெருமை அவருக்கேயுரியது. வெறுமனே உருவாக்கியவர் என்பதை விட, ‘ஞானம்’ ஆசிரியர் குறிப்பிடுவதைப் போல ‘எழுத்துலகத் துக்குப் பலரைச் செதுக்கியெடுத்த இலக்கியச் சிற்பி அவர்’ என்பதே பொருந்தும்.

இப்பொழுது சில பத்திரிகை ஆசிரியர்கள் செய்வது போல, எழுத்தாளர்கள் அனுப்புவதை அப்படியே பிரசுரித்து உதவுவது என்றில்லாமல், கிடைக்கும் சிறுகதை போன்ற ஆக்கங்களை சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களின் சம்மதத்துடன் திருத்தியும் மெருகிட்டும் பிரசுரிப்பார். எழுத்து நடையானது சிக்கலற்றும், தெளிந்த நீரோடை போன்றும் இருக்க வேண்டும் என்பது சிற்பியின் கருத்தாகும். ‘கலைச்செல்வி’ பற்றி இலக்கிய உலகில் பேசப்படுவதற்கும் – ‘கலைச்செல்வி’ மீண்டும் வெளிவர வேண்டும்

என்ற குரல் எழுவதற்கும் சிற்பி அவர்களின் இத்தகைய தனித்துவங்கள் தான் காரணம் எனலாம்.

சிற்பி அவர்களின் இலக்கியப் பணிகளுக்காகக் கிடைத்த கௌரவங்களாக வடக்கு – கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் 'ஆளுநர் விருது' (2002), கொழும்பு கம்பன் கழகத்தின் 'சான்றோர் விருது' (2006), வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் 'ஞான ஏந்தல்' விருது (2006) எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 'தமிழியல் விருது'(2011), சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள் அறிநிதியச் சபையின் 'சிவத்தமிழ் விருது' (2012) என்பனவற்றைக் குறிப்பிடலாம். குறிப்பிடத்தக்க சேவையாற்றிய பலருக்கும் கிடைக்கும்'கலாபூஷணம்' விருது சிற்பி ஐயாவுக்குக் கிடைக்காமல் போனது ஏன்?

எனக்கு வந்த 2008ஆம் ஆண்டுக்கான 'கலாபூஷணம்' விருதுக்கான விண்ணப்பத்தினை சிற்பி ஐயாவிடம் காட்டினேன். மூதறிஞரான அவருக்குக் கிடைக்காத அந்த விருதுக்கு நான் எப்படி முந்திக்கொண்டு விண்ணப்பிப்பது என்ற எனது ஆதங்கத்தை அவரிடம் வெளியிட்டேன். அதற்கவர், 'உமக்கது எப்போதோ கிடைத்திருக்க வேண்டும்'என்றார். அதற்கு முன் எப்போதோ கிடைத்திருக்க வேண்டிய அவர், தாம் விருதுகளை விண்ணப்பித்துப் பெறுவதில்லை என்ற கொள்கையுடையவர் என்றும், என்னை அதற்கு விண்ணப்பிக்குமாறும் ஆசி வழங்கினார்.

அத்துடன், 'கலாபூஷணம்' விருது எனக்குக் கிடைத்ததும், அச்செய்தியை எனக்குமுன் அறிந்து சிற்பி அவர்கள் எனக்குத் தெரிவித்ததுடன் பாராட்டியும் மகிழ்ந்தார். (எமக்குச் சற்று அருகில் இருந்தவர்களான சிற்பி – சிவசரவணபவன் – அவரது மாமனார் க. வைத்தீசுவரக் குருக்கள் எல்லாரும் 'நிஷா' வெள்ளம் புயல் காரணமாக அப்போது யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்திருந்த காலம்)–இது சிற்பி அவர்களின் பெருந்தன்மைக்கும் தமது கொள்கையை மற்றவர்களிடம் வலிந்து திணிக்காத பண்பாட்டுச் சிறப்புக்கும் எடுத்துக்காட்டு எனலாம்.

சிற்பி ஐயா கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக கொழும்பில் தனது இளைய மகன் சர்வேஸ்வரனின் இல்லத்தில் தங்கியிருந்து தொடர்ச்சியான வைத்திய சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். அதனால் அவரில்லாத இலக்கிய உலகு இங்கு களையிழந்திருந்தது. அவர் அவ்வப்போது இங்கு வந்தாலும் அதிக நாட்கள் தங்கியிருப்பதில்லை.

2015 பெப்பிரவரி மாதத்தில், அவரது இல்லத்துக்கு அருகேயுள்ள வற்றாக்கைப்பதி அருள்மிகு விசாலாட்சி அம்பாள் கோவில் குடமுழுக்கு விழாவுக்காக வந்திருந்தார். உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையிலும் இங்கு அவர் நிகழ்த்திய அருளுரை எம்மனதைவிட்டு அகலவில்லை.

அதனையடுத்து மீண்டும் அவர் இங்கு வந்தபோது – 2015 சித்திரை 25ஆம் நாளன்று அவரது தாய்மாமனாரும் அவரது ஆளுமையை வளர்ப்பதில் பெரும் பங்களித்தவருமான சிவத்திரு. க. வைதீசுவரக் குருக்கள் மறைந்தார். அத்துயரத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட சிற்பி ஐயா அவர்கள் கலங்கிய கண்களுடன் இரங்கலுரை ஆற்றியது நினைவுக்கு வருகிறது.

அதே ஆண்டு யூன் 21 இல் கலைச்செல்வி வெளியீட்டில் பெரும் பாங் காற்றிய உதயணனின் 'பின்லாந்தின் பசுமை நினைவுகள்' என்ற நூல் வெளியீடு கனடாவில் நடைபெற்றது. அதற்கு 'சிற்பி'யின் வாழ்த்துரையை விரும்பிய அங்குள்ள 'தாய்வீடு' வெளியீட்டாளர்கள், அதனைக் கொழும்பிலே வைத்து ஒளிப்பதிவு–ஒலிப்பதிவு செய்தனர். ஐயா படிப்படியாக நினைவாற்றலை இழந்து வந்ததால், அந்தப் பதிவை மிகவும் சிரமப்பட்டுத் திருப்பித் திருப்பி எடுத்தே தயாரித்–தார்களாம். இருந்தபோதும், கனடா வெளியீட்டு நிகழ்வில் அது பலரும் பாராட்டும் வகையில் சிறப்பாக அமைந்துவிட்டதாம். அந்தச் செய்தியை நான் ஐயாவுக்குச் சொல்ல முற்பட்டபோது... அவர் இயலாமையால் பாதிக்கப்பட்டிருந்தார்... அவரின் மனைவி சரஸ்வதியிடமே நான் அதனைச் சொல்ல முடிந்தது.

கடைசியாக ஒரு நாள், அங்கு அவர் சுவாமி அறையிலே, படத்துக்கு முன் நின்று தேவாரம் பாட முற்பட்டிருக்கிறார். அந்தோ, அவருக்கு எதுவுமே நினைவுக்கு வரவில்லை. "எல்லாமே போய்விட்டது" என்றவாறு படுக்கையில் விழுந்தவர்தான் இறுதிவரை அதே நிலைதான்.

சிற்பி ஐயாவின் இறுதிச் சடங்கு கந்தரோடையில் நடைபெற்ற நாளன்று தீபாவளி நாளாகவும் கௌரி நோன்புக் காலமாகவும் இருந்தது. இருந்தும் பெருந்திரளான மக்கள், அவற்றை யெல்லாம் பொருட்படுத்தாமல் – அவரின் மறைவால் எமக்கும் 'எல்லாமே போய்விட்டது' என்ற உணர்வுடன் பங்குபற்றியமை மனங்கொள்ளத் தக்கது.

வாழ்க அவர் புகழ்! வாழும் அவர் புகழ்!

# பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே

திருமதி. கனகாம்பிகை ஜெகநாதன் B.A (cey) Dip-in Ed.
சிட்னி, அவுஸ்திரேலியா.

மானிடப்பிறவியை விட மற்றும் எந்தப்பிறவியும் இறைவனைப் பற்றிச் சிந்திக்கவோ, அவர் மீது பக்தி செலுத்தவோ இயலாது. மனிதப்பிறவி எடுத்த ஆன்மாவே பரமாத்மாவைச் சேர்வதற்கு விரும்பி நிற்கின்றது. மக்களாகிய நாம் செய்கின்ற நல்வினை தீவினைகளின் பயனாகவே பிறந்தும் இறந்தும் மீண்டும் பிறவிகள் எடுத்து வருந்துகின்றோம் பட்டினத்தடிகள்.

"முன்னம் எத்தனை எத்தனை சென்மமோ
முடனாய் அடியேனும் அறிந்திலேன்
இன்னம் எத்தனை எத்தனை சென்மமோ
என் செய்வேன் கச்சி ஏகம்ப நாதனே."

என்று கூறுகின்றார். உலக வாழ்க்கையில் ஆன்ம ஈடேற்றத்திற் குரிய முயற்சிகள் எதனையும் பின்பற்றாது தம் வாழ்நாளை வீணாக்குவோர் பலர். இத்தகைய மக்களின் பரிதாப நிலையைக் கண்டு திருநாவுக்கரசு சுவாமிகள் ஒரு தேவாரத்திலே,"பிறப்பதற்கே மொழிலாகி இறக்கின்றாரே' என்று கூறுகின்றார். அதற்குரிய காரணம் யாதென்று அறிய வேண்டும். பல்வகைப்பட்ட உயிர் வகைகளுள் பகுத்தறிவு படைத்த மனிதனே உயர்ந்தவனெனக் கருதப்படுகின்றான். சாதாரணமாக மக்களுடைய சிந்தனை உலகப்பயன்கள் பற்றியதேயாகும். ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்களாற் கட்டுண்டு வாழ்நாள் முழுவதும் சிவசிந்தனை, நற்சிந்தனைகளை மறந்து பந்தபாசங்களில் அகப்பட்டு நல்வினை தீவினை என்னும் இரு வினைகளைச் செய்து ஈற்றில் இறக்கின்றனர். இரங்கத்தக்க இந்த நிலையைக் கண்டு அப்பர் சுவாமிகள் மீளும் வழியை ஒரு தேவாரம் மூலம் (திருத்தாண்டகம்) கூறுகின்றார்.

"திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன் முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
அரு நோய்கள் கெட வெண்ணீறணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே" (6-95-6)

இவ்வுலகில் நல்வாழ்வை நடத்துவதற்கும் மனிதப் பிறவியின் நோக்கத்தை அடைவதற்கும் சிறந்த சாதகமாய் இருப்பது 'நமசிவாய' என்ற இறைவனின் திருநாமமாகும். ஞானசம்பந்தர் 'நாதன் நாமம் நமசிவாய' என்று தமது தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார். இறைவன் திருநாமத்தை ஓதுபவர்கள் நன்னெறியில் செல்வர் என்று கூறுகின்றார். 'நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமசிவாயவே' என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம். திருநாவுக்கரசு சுவாமிகள் 'படைக்கலமாக உன் நாமத்தெழுத்தைஞ்சென் நாவிற் கொண்டேன்' என்று சிவநாமத்தின் சக்தியை விளக்குகின்றார். மாணிக்கவாசக சுவாமிகள் 'நமசிவாய வாழ்க நாதன் தாள்வாழ்க'என்கின்றார். இவ்வாறு திருமுறைகள் பஞ்சாட்சரத்தின் மகிமையை விளக்குகின்றன. திருமுறைகள் மட்டுமல்ல சிவஞானபோதம் போன்ற சித்தாந்த சாத்திரங்களிலும் ஐந்தெழுத்தின் பெருமை விளக்கப்பட்டுள்ளது. 'திருநீறுமிட்டுக் கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத் தோதவும் கற்பியுமே' என்று தான் இறக்கும் போது யாது செய்ய வேண்டும் என்றும் அதற்கு இறைவன் அருள்கூர வேண்டும் என்று பட்டினத்தடிகள் கூறுகின்றார்.

இரண்டாவதாக 'தீவண்ணார் திறம் ஒருகால் பேசாராகில்' சோதி வடிவான சிவபெருமானின் பெருமைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும், பேச வேண்டும். முழுமுதற் கடவுளாகிய இறைவன் உயிர்கள் மீது கருணையும் அன்பும் உடையவர். உயிர்கள் உய்தி அடையும் பொருட்டு ஐந்தொழிலைப் புரிகின்றார். இறைவனின் பெருமையை விளக்கும் தேவார திருவாசகங்களைப் பாராயணம் செய்வது மன்னுயிர்கள் உய்தி பெறுவதற்குச் சிறந்த சாதனமாக இருக்கும்.

'ஒரு காலும் திருக்கோயில் சூழாராகில்' மக்களுக்குக் கோயில் வழிபாடு இன்றியமையாதது. வீட்டிலும் ஏனைய இடங்களிலும் மனம் ஒன்றி வழிபடுதல் கடினமானதாகும். அலையும் மனம் நிலைபெற உருவ வழிபாடு வேண்டும். உருவ வழிபாட்டிற்குச் சிறந்த இடம் கோயிலாகும். ஆலயங்களில் உருவங்களைக் கண்ணுற்று அன்புடன் வழிபடலால் புலன்கள் ஒடுங்குகின்றன. இறைவனின் உருவத்தைப் பற்றுக் கோடாக வைத்து வழிபடும் அடியார் ஈற்றில் இறைவன் திருவடியொன்றே தமக்கு ஆதாரம் என்ற உண்மையை அறிகின்றனர். ஆகையால் கோயில்களுக்குத்

தவறாது சென்று வழிபாடு செய்தல் வேண்டும். 'உண்பதன் முன் மலர்பறித்திட்டு உண்ணாராகில்' இறைவனை நினைந்து ஒரு மலராகுதல் அவருடைய பாதங்களிலிட்டு உண்ணவேண்டும் 'சலம்பூவோடு தூபம் மறந்தறியேன்' என்று அப்பர்சுவாமிகள் கூறுவதைக் கவனிக்கலாம்.

நாம் முன்செய்த பாவங்கள் நீங்கத்தக்கதாகத் தினமும் திருநீற்றை அணியவேண்டும். அவ்வாறு செய்யத் தவறியவர்கள் பெரும் நோய்களாற் பீடிக்கப்பட்டு இறந்து மீண்டும் பிறப்பு இறப்பு ஆகிய இரண்டிற்கும் ஆளாகித் துன்பப்பட நேரிடும். பிறவியை அறுப்பதற்கு இறைவனுடைய தியானமும் பிரார்த்தனையுமே துணைபுரியும். இறைவனின் பாதங்களை எந்நேரத்திலும் நினைந்து வாழ்ந்தால் பிறவிக் கடல் நீந்துவதற்குரிய வழிதோன்றும்.

'துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாடொறும்'


என்று திருஞானசம்பந்த சுவாமிகள் கூறுவதைக் கவனிக்கலாம். இறைவனின் நாமத்தை என்றும் கூறுவதனாலே நாம் செய்த பழவினைகள் தேய்ந்து போகின்றன. மானிடப்பிறவி எடுத்த நாம் இவ்வுலகில் வாழும் காலத்தில் இறைவனை மனம் வாக்கு காயத்தினாற் பிரார்த்தித்து ஒழுக்க சீலராக வாழ்ந்து பிறவிக்கடலை நீந்திப் பேரின்ப வாழ்வை அடைய முயற்சிக்க வேண்டும்.

எவ்வளவு செல்வச் செருக்குடன் ஒரு சமுதாயம் இருந்தாலும் குறிக்கோளும் தொண்டு மனப்பான்மையும் இல்லையானால் அச்சமுதாயம் நீண்ட நாள் வாழ முடியாது. இவை இரண்டும் சேக்கிழார் காலத்தில் தமிழ்ச்சமுதாயத்தை விட்டு மறைந்து விட்டன. எனவே அச்சமுதாயத்தைத் தட்டி எழுப்பி இவை இரண்டின் இன்றியமையாமையை அறிவிக்க விரும்புகிறார் சேக்கிழார்.

அ.ச.ஞா
சேக்கிழார் தந்த செல்வம்.

சென்ற இதழ் தொடர்ச்சி

# சைவத்தை அறியுங்கள்



(சித்தாந்தரத்தினம், கலாநிதி க. கணேசலிங்கம்,
அன்புநெறி சிறப்பாசிரியர், மன்றக்காப்பாளர்)

## 8. சைவக் கோயில்கள்

### திருக்கோயில் வீதிகள்

கோயில்களுக்கேற்ற வகையில் வீதிகளின் (பிரகாரங்களின்) எண்ணிக்கை இருக்கும். பெரிய கோயில்களில் ஐந்து அல்லது மூன்று வீதிகளும் சிறிய கோயில்களில் இரண்டு அல்லது ஒரு வீதியும் இருக்கும். இவற்றுக்கும் சில உட்கருத்துக்கள் உண்டு.

உள் வீதியில் சில இறை மூர்த்தங்களைக் காணலாம். இவை பரிவார மூர்த்திகள் எனப்படும். இறைவனின் வெவ்வேறு அருட்செயல்களைக் குறிப்பதாக இவை அமைந்துள்ளன. திருக்கோயில் வீதியில் எப்பொழுதும் வலமாக வந்து இத்தெய்வங்களை வழிபட வேண்டும். கோயில் வலம் வருதல் என்ற சொல் கோயிலை மையமாக வைத்து வலப்பக்கமாக வருதலைக் குறிக்கும்.

ஆன்மாவுக்கு ஐந்து வகையான உடம்புகள் உண்டு. உணவினால் உண்டான பருவுடம்பு ஒன்று. இது அன்னமயகோசம் என்றும் தூல சீரம் என்றும் கூறப்படும். இது தவிர அசுத்தமாயா தத்துவங்களாலான நாலு நுண்ணுடம்புகள் உண்டு. இவை பிராணமய கோசம் எனப்படும் சூக்கும சீரம், மனோமய கோசம் எனப்படும் குண சீரம், விஞ்ஞான மயகோசம் எனப்படும் கஞ்சுக சீரம், ஆனந்த மயகோசம் எனப்படும் காரண சீரம் ஆகும். இந்த ஐந்து சீரங்களும் முறையே ஒன்றைவிட ஒன்று நுண்மையானது.

ஐந்து வீதிகள் உள்ள கோயிலில், அவை ஆன்மாவின் ஐந்து சீரங்களையும் குறிப்பன. ஐந்தாவதாக உள்ள வெளிவீதியிலும் பார்க்க அதன் உள்ளிருக்கும் நான்காவது வீதி (சுற்றளவு குறைந்து) குறுகியதாகி, தூல சீரத்திலும் பார்க்க சூக்கும சீரம் நுண்மையானதென்பதை உணர்த்துகிறது. இங்ஙனமே ஒவ்வொரு வீதி அமைப்பும் ஒவ்வொரு சீரத்தின் நுண்மையை உணர்த்துகிறது.

திருக்கோயிலில் மூன்று வீதிகள் மட்டும் இருப்பின் அவை தூல சீரம், சூக்கும சீரம், காரண சீரம் ஆகியவற்றைக் குறிக்கும்.

அத்துடன் ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவ தத்துவம் ஆகிய மூன்றையும் குறிப்பதாகக் கூறுவதுமுண்டு. இவற்றைவிட உயிர்களின் கேவலம், சகலம், சுத்தம் ஆகிய நிலைகளையும், ஆன்மா அடையும் பாசஞானம், பசுஞானம், பதிஞானம் ஆகியவற்றையும் குறிப்பதாகவும் கூறப்படும்.

இரண்டு வீதிகள் மட்டுமே உளதாயின் அவை ஆன்மாவின் தூல சீரத்தையும் சூக்கும சீரத்தையும் குறிக்கும். ஒரு வீதி மட்டுமே இருப்பின் அது ஐந்து சீரங்களையும் ஒருங்கே குறிக்கும்.

## பூசை, அபிஷேகம் முதலியன

திருவிழாக் காலங்களில் இறைவன் திருவீதி வலம் வருதல், எல்லா உலகங்களையும் உயிர்களையும் காத்து அருளலைக் குறிப்பதாகும். ஆண்டுக்கொருமுறை மட்டுமன்றி மாதங்களில் வரும் விசேட தினங்களிலும் உற்சவங்கள் நடைபெறும். மார்கழித் திருவெம்பாவை நாட்களில் நடக்கும் உற்சவம் முக்கியமானது. கந்தசட்டி, நவராத்திரி போன்ற நாட்களிலும் கோயில்களில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும். இத்தகைய சிறப்பு நாட்களில் நடைபெறும் பூசை நைமித்திய பூசை எனப்படும். நாளாந்தம் நடைபெறுவது நித்திய பூசை. இது மூன்று காலப்பூசை அல்லது ஆறு காலப் பூசையாகக் கோயிலின் பொருள் வசதிப்படி நடைபெறும்.

பூசையில் தூப தீபம் காட்டி நைவேத்தியம் படைப்பது வழக்கம். தூபம் காட்டுவதால் எமக்குள்ள ஆற்றல் அல்லது கிரியா சக்தி எழுப்பப்படுகிறது. தீபம் அறிவு அல்லது ஞானத்தை விளக்குவது. இதனால் எமது அறிவு விளக்கமுற்று ஆணவம் என்னும் இருள் விலகும். கற்பூரம் வெண்மை நிறமானது. சாத்துவிக குணத்தைக் குறிப்பது. கற்பூராதானையால் எமக்குச் சாத்துவிக குணம் மிகுந்து, பாசங்கள் எரிந்து, எங்கும் நிறைந்துள்ள இறையருளில் ஒன்றுகிறோம்.

பசுவின் பால், பன்னீர் போன்ற பலவகைப் பொருட்களால் இறைவனுக்கு அபிடேகம் செய்யப்படும். அதன்பின் மலரிட்டுத் தூப தீபம் காட்டிப் பூசை செய்யப்படும். தனிப்பட்ட அர்ச்சனைகளும் செய்யப்படும். இவை எல்லாவற்றுக்கும் தத்துவக் கருத்துக்கள் உண்டு. பழம் போன்ற பொருட்கள் ஐம்பூதங்களில் ஒன்றான நிலத்தையும், பால் போன்றவை நீரையும், கற்பூரதீபம் போன்றவை

நெருப்பையும் வாசனை மிக்க தூபப் பொருட்கள் காற்றையும் ஓதப்படும் மந்திரம், அருட்பாடல்கள், மணியோசை போன்றவை ஆகாயத்தையும் குறிப்பன. உலக வாழ்விற்குத் தேவையான பஞ்சபூதங்களைப் படைத்தளித்த இறைவனைச் சார்ந்தே நாம் இருக்கிறோம் என்பதை அபிஷேகங்களும் பூசைகளும் உணர்த்துகின்றன.

திருக்கோயில் புதிதாகக் கட்டப்பட்டவுடன் கும்பாபிஷேகம் (குடமுழுக்கு) நடைபெறும். இந்த விழாவின் பின்னர்தான் கோயில் வழிபாட்டுக்குத் திறந்து விடப்பட்டு, பூசைகள் திருவிழாக்கள் நிகழும். குடமுழுக்கில் கருவறையின் மேலுள்ள விமானத்துக் கலசம் கும்பத்திலுள்ள நீரால் அபிஷேகம் செய்யப்படும். திருக்கோயில் நிகழ்ச்சிகளில் கும்பாபிஷேகம் முக்கியமான ஒன்று. இதைவிடச் சங்காபிஷேகம் போன்ற அபிஷேகங்கள் இடைக்கிடை பக்தர்களால் செய்யப்படும். இந்த அபிஷேகங்களெல்லாம் சைவ ஆகம முறைப்படி நடைபெறுவன.

காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி லிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே.
- அப்பர் தேவாரம்

**மன்றத்தில் நிகழ்ந்தவை**

## கலைமகள் வழிபாடு

கலைமகள் வழிபாடு 7–10–2016 வெள்ளிக்கிழமை மாலை 7:00 மணிக்கு யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் நடைபெற்றது. முதலில் கூட்டு வழிபாடு நடைபெற்றது. தொடர்ந்து முப்பெருந்தேவிகளுக்கு சிறப்புப் பூசை நடைபெற்றது. தொடர்ந்து எல்லோருமாக அபிராமி அந்தாதிப் பாடல்களும் சகலகலாவல்லி மாலைப் பாடல்களும், நவராத்திரி பற்றிய பாரதியார் பாடல்களும் பாடினார்கள். மற்றும் நவராத்திரி பற்றிய பேச்சுக்களும் இடம் பெற்றன. மாணவர்கள் யாவரும் தங்கள் தங்கள் புத்தகங்களை வைத்து வழிபட்டு நாள் படிப்பும் செய்தார்கள். தொடர்ந்து பூசை நடைபெற்று பிரசாதம் வழங்கலுடன் வழிபாடு இனிதே நிறைவுற்றது.


10–10–2016 அன்று ஏடு தொடக்குதல் மன்ற காரியாலயத்தில் வழிபாட்டுடன் நடை பெற்றது.

சென்ற இதழ் தொடர்ச்சி

# என் நெஞ்சில் இடங்கொண்ட ஒரு பெரியர்

(திரு. மு. வைரமுத்து ஜே. பி. முன்னாள் சி.சி.எஸ்)

## 8. எட்டிலும் எண்பதிலும்



பக்திசிரத்தை, அடக்கம், மனத்தூய்மை, இவை சம்பந்தப்படாத வழிபாடு, பயனற்றதாகும். மனத்தூய்மை பெற ஒரேயொரு வழி, இறைவனை நோக்கி, எம் சிறுமையை உணர்ந்து, மனங்கசிந்து, அழுவதுதான். அழுகையினாற்றான் உள்ளத்து அழுக்கைக் கழுவ முடியும். கோயிலிலுள்ள மூர்த்திக்கு முன்னால் எவ்வளவு திரவியங்களைக் குவித்து நெய்வேத்தியம் பண்ணினோம்; திருவிழாவிற்கு எத்தனை கூட்டம் மேளம் பிடித்தோம்; கோயிற் பிரகாரத்தை எத்தனை முறை வலம் வந்தோம்; இவையல்லக் கேள்வி. வழிபாட்டின்போது எங்கள் மனோபாவம் எப்படி இருந்தது; மனம் அங்கலாய்ப் பொழிந்து, சாந்தமாய் இருந்ததா; நெஞ்சம் நெக்கு நெக்கு உருகியதா; இறைவன் எம்மை ஆள்பவன், நாம் அவனின் அடிமைகள். எம்மால் இங்கு ஆவதொன்றில்லை. அவனின் கிருபாகடாட்சமே இம்மையில் எம்மை வாழவைக்கும். மறுமையிலும் வானுலகு அளிக்கும் என்று நினைந்து நினைந்து, எமது அகங்கார மமகாரங்களை அறவே ஒழித்து, நாம் வழிபடும் தெய்வத்திடம் சரணாகதி அடைய முடிந்ததா; இவைதான் கேள்வி. இந்நிலை ஒருநாள் இருநாளில் கைகூடுவதல்ல. வழிபாட்டுக்குச் செல்லும் எந்நாளும், எப்பொழுதும், இந்த மனோபாவத்தை அப்பியாசப் படுத்திவரின், என்றோ ஒருநாள் ஈசன் அருள் கைகூடும். உயிரற்ற யந்திரங்கள் தொழிற்படுவதுபோல, ஆலயங்களுக்குச் செல்வதும், மனத்தை எங்கெங்கோ அலைந்து திரியவிட்டு உடம்பினால் மாத்திரம் பழைய சம்பிரதாய முறைப்படி வழிபாடுகளை முடித்துக் கொண்டு வீடு திரும்பி, என்றும் போல் உலக ஆசாபாசங்களில் அழுந்திக் கிடப்பவர்களுக்கு ஈடேற்றம் கிடைப்பது அரிது என்று சொல்லவும் வேண்டுமோ!

நான் கொழும்பில் உத்தியோகம் பார்த்த காலத்தில் பதினான்கு முறை தென்னிந்தியாவுக்குச் சேத்திர யாத்திரைக்கென்று சென்று இருக்கிறேன். பிற்காலத்தில் இதைப்பற்றி என் நணபர்களுக்குப்

பலமுறை சொல்லி பெருமிதம் அடைந்ததுண்டு. இப்போ அதைப்பற்றிச் சிந்திக்கும்போது, என் மடைமையை நினைத்து நானே வெட்கமும் துக்கமும் பட வேண்டியிருக்கிறது. பதினான்கு தரம் யாத்திரையா? எதற்காக? ஒரு செக்கைச் சுற்றிப் பதினான்கு முறை ஒரு எருது நடந்து விட்டால் அது ஒரு என்ஜினியராகி விடுமா? எத்தனை தரம் கும்பிட்டோம் என்பதல்லக் கேள்வி; எப்படிக் கும்பிட்டோம் என்பதில் தான் தங்கியிருக்கிறது பலாபலன்.

இறைவன் எங்களிடம் வேண்டுவது நாம் கொண்டு செல்லும் பழம் பாக்கு வெற்றிலையை அல்ல. இவை அவன் சொத்து. இவை மாத்திரம் அல்ல; பிரபஞ்சத்தில் உள்ள சகலமும் அவன் உடைமை. அவற்றைத் தன் எல்லையற்ற கருணையினால் அவன் எங்களுக்குத் தந்திருக்கிறான். அவற்றுள் எதையேனும் அவனுக்குத் திருப்பிக் கொடுக்க நாங்கள் நினைப்பதில் அர்த்தமில்லை. எங்களுக்குச் சொந்தமானது ஏதும் இருப்பின், அதை இறைவனுக்கு அர்ப்பணிக்க எங்களுக்கு உரிமை உண்டு. எங்களுக்குச் சொந்தமானது ஒன்றே ஒன்றுதான் எங்களிடம் உண்டு. அதுதான் எங்கள் அறியாமை. அதை எடுத்துக்கொண்டு அறிவைத் தரும்படி இறைவனை வேண்டுதல் முறை. அறியாமையை அவனுக்கு அர்ப்பணம் செய்து விட்டோமேயாயின் அறிவு பிரகாசிக்கும். அப்போதுதான் இறைவன் நமக்கு காட்டும் எல்லையற்ற கருணையின் தன்மையை நாம் அறிவோம். அது விளக்கம் பெற, அவனிடத்து அன்பு சுரக்கும்.

கடவுளிடத்து நமக்கு உண்டாகும் அன்பே பக்தி எனப்படுவது. பக்தியினாலன்றி ஆண்டவனின் அருளைப் பெற்றுவிட முடியாது. இது சத்தியம். பக்தி செய்வதற்குப் புலனடக்கம் இன்றியமையாதது. ஆலயங்களும் வழிபாட்டு அரங்குகளும், புலனடக்கத்துக்குச் சாதகமாயிராது. ஆடம்பரங்களினாலும், ஆரவாரங்களினாலும் அதற்குப் பாதகமாயிருக்கும் வரை, ஆலய வழிபாடு பயனளிக்க முடியாது. இன்று நம் ஆலயங்கள் ஆன்மா இலயப்படும் இடங்கள் தானா? சமயப்பற்றுள்ள யாவரும் இதை நன்கு சிந்திக்க வேண்டும். ஆண்டவனுக்குப் பக்தியோ பணியோ நெஞ்சத்தாலேயே செய்து விடலாம். நாம் இறைவனை மனமார நினைத்தாற் போதும். ஒரு கால் நினைக்கில் இருகாலும் அன்பர்க்கு அருள்புரிய வருவது அவன் இயல்பு.

# 9. விடுவானேன் பிடிப்பானேன்.

பன்னிரண்டு வருடகாலமாக நோய்வாய்ப்பட்டு வருந்திய என் வாழ்க்கைத் துணைவி, *1942*ம் ஆண்டு காலமாகி விட்டார். இந்தப் பன்னிரண்டு வருடமும், என்னுடைய இல்லற வாழ்க்கை பள்ளமும் திட்டியுமான கல் றோட்டில் ஓட்டப்பட்ட மாட்டு வண்டி போலத்தானிருந்தது. இருந்தும் யோகர் சுவாமிகளின் தொடர்பு எனக்கு எல்லையற்ற ஆறுதலைக் கொடுத்தது. மனைவியின் மரணம் ஒரு சகாப்தம் முடிந்தது போல் இருந்தது.

அந்தக் காலம் யான் உத்தியோக சிமித்தமாக இலங்கையில் பல இடங்களுக்கும் பிரயாணம் செய்ய வேண்டி இருந்தது. ஒருமுறை கண்டியில் வேலை பார்க்கும்பொழுது, ஒரு அபூர்வமான சம்பவம் நிகழ்ந்தது. கண்டியில் எம்பயர் கொட்டல் (Empire Hotel) என்னும் போசன சாலையில் என் விடுதி, அது விரும்பத்தக்க இடமல்ல. பகல் பன்னிரண்டு மணி தொடங்கி இராப் பன்னிரண்டு மணி வரையும், மது போதையில் கூத்தாடுபவர்களின் குகை. வேறு வசதிகள் இல்லாமையால் கட்டிடத்தின் மேல் அடுக்கில் சன நடமாட்டமில்லாத ஒரு சிறு மூலை அறையில் நான் இருந்தேன். ஒரு நாள் இரவு முழுவதும் எனக்கு நித்திரையே வரவில்லை; இவ்வுலக வாழ்க்கையில் அப்போதைய என் நிலை என்னை ஆழ்ந்த சிந்தனையில் அமிழ்த்தயிருந்தது. வாழ்க்கைத் துணைவி மறைந்ததும், எனது குடும்பம் ஒரு தனி மனிதனாய் விட்டது. இனி அடுத்தபடி என்ன? என்ற கேள்விக்குப் பதில் காண வேண்டி இருந்தது. பலவித எண்ணங்களினால் மனம் ஊசலாடிக் கொண்டிருந்தமையால் உறங்க முடியவில்லை. சகலதையும் சிந்தித்துக் காலையில் எழுமுன் ஒரு முடிவுக்கு வந்திருந்தேன். இல்லற வாழ்க்கை இனிப்போதும்; உத்தியோகமும் போதும். கொழும்பு திரும்பியதும் உத்தியோகத்திலிருந்து இளைப்பாறிக் கொண்டு, சில காலம் இந்தியாவில் யாத்திரை செய்வது; மேல் நடப்பது ஆண்டவன் செயல்; இதுவே அந்த முடிவு.

காலை ஏழு மணியளவில் வேலைக்குப் புறப்பட ஆயத்தமானேன், என் அறைக்கதவில் யாரோ மெதுவாகத் தட்டிய சத்தம் கேட்டது. கதவைத் திறந்தேன். என்ன ஆச்சரியம்! என் கண்களை நம்ப முடியாத ஒரு தோற்றம் தென்பட்டது. அதுதான் யோகர் சுவாமிகள்.

“என்ன செய்கிறாய்?”

என்று கேட்டுக்கொண்டு உள்ளே புகுந்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். என்ன செய்வது, என்ன சொல்வது என்று எனக்கொன்றுமே தெரியவில்லை. சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தேன். அந்த நேரத்தில், அந்த இடத்தில், தனிமையாக என்னைத் டேிப்பிடித்து வந்ததன் காரணம் என்னவாயிருக்கலாம்? என் மனக் கலக்கமும் பரபரப்பும் தீரமுன்

**“விடுவானேன் பிடிப்பானேன்?”**


என்றார் சுவாமி, சட்டென்ன எனக்கு விஷயம் வெளித்தது. நான் ஒன்றும் பேசவில்லை. தான் சொன்ன வார்த்தையின் பொருள் எனக்குப் புரிந்து கொண்டது எனச் சுவாமி அறிந்து கொண்டார்; ஆகவே மேலதிகமாக அந்த விடயத்தைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை.

“பேராதனையில். . . இடமிருந்து நீ இங்கே தங்கியிருப்பதாக அறிந்தேன். இங்கு வர அவர் ஒரு காரும் தந்தார். உன்னைப் பார்த்திட்டுப் போகலாமென வந்தேன். நீ வேலைக்குப் போ; நானும் என் வேலைக்குப் போகிறேன்.”

என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டார். நானும் அவருடன் அவருக்குப் பாதுகாப்பாகப் படிகட்டு வழியே இறங்கி வழியனுப்பி விட்டுத் திரும்பினேன். என்ன கருணை ஒன்றுக்கும் பற்றாத என்னையும் ஒரு பொருட்படுத்தித் தானே தேடி வந்து, என் மனதை இரா முழுதும் கலக்கிய விஷயங்களுக்கு நான் கண்ட முடிவு பிழையானதென, இரத்தினச் சுருக்கமாக எனக்கு இடித்துரைக்க நினைத்தாரே? என்று என் இதயம் உருகியது; கண்கள் கலங்கின. திருவருள் தொழிற்படும் முறையை நினைந்து நினைந்து பரவசமாயினேன். சிறிதளவேனும் பூர்வ புண்ணியம் உண்டென்று நினைத்து ஒருகால் மகிழ்ச்சியும் உண்டானது. உலகம் போற்றும் உத்தமரான ஒரு பெரியவரின் கிருபாகடாட்சம் நாயினும் கடையேனாகிய எனக்கும் கிடைத்ததே என எண்ணி மனம் பூரித்தது.

– தொடரும்

ஊமைபோ லிருந்தேயுண்மை யுணருவார் தங்கட் கெல்லாம்
தாய்மைபோ லருளைச்செய்யுஞ் சங்கரா நமச்சிவாய.
– யோகசுவாமிகள்



# திருக்குறள் சிந்தனை

டாக்டர் சுப. அண்ணாமலை

## 15. அடிப்பதும் அணைப்பதும்

சுவரை வைத்தே சித்திரம். வாழ்க்கையின் பலப்பல துறைகளிலும் செல்வம் பெருகுவதற்கு, அவற்றில் ஈடுபடுவோரின் உழைப்புத் தேவை. மழை இல்லையேல், உணவு உற்பத்தி குறைந்து, உழைப்பும் குறையும். நாடு வறுமை அடையும். மழை பெய்யாமல் கெடுப்பதுபோல், எல்லாரையும் வறுமை அடையச் செய்யும் சக்தி வேறு இல்லை. கெடுபவரும் மிகப் பல கேடும் மிகுதி.

இப்படி மழை இன்மையால் சீரழிந்த நாட்டை மறுபடி சீரமைக்க வேறு நாட்டின் உதவியை வேண்டலாம்; பெறலாம். ஆனால் அது போதாது. உதவி கிடைத்தாலும் கடனாகத்தானே கிடைக்கும். மறுபடியும் மழை பெய்தால்தான் நாட்டை நன்கு சீரமைக்க முடியும். எனவே அடிப்பதும் மழைதான் அணைப்பதும் மழைதான்.

பரவலாகப் பெரிய நன்மை செய்யும் ஒன்று. எப்போதும் தீமை செய்யாது. ஆனால், அது இல்லாமல் போவதே பெரிய தீமையாக முடிகிறது. தாய் அடித்தாலும் குழந்தை அம்மா என்று தான் அழுகிறது. அதுபோல, மழை பெய்யாமல் கெடுத்தாலும் நமக்கு அதை விட்டால் வழி இல்லை.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே  
எடுப்பதூஉம் எல்லாம் மழை. *குறள் 15*

**கருத்துரை:** பெய்யாமல் மக்களை கெடுப்பதும் கெட்டார்க்குத் துணையாய் நின்று, பெய்து காப்பாற்றுவதும் ஆகிய எல்லாம் மழையே ஆகும்.




**டன்டாஸ் பல் மருத்துவமனை**
**போவியாட் பல் மருத்துவமனை**
**குடும்ப பல் மருத்துவர்**

*Family and General Dentistry*

**Dr. Vanathy Jeevakumar**
**டாக்டர் திருமதி வானதி ஜீவகுமார்**

**சகல பல் மருத்துவ சேவைகள்**
(Including Braces Implants)
வாரத்தில் ஏழு நாட்கள்

* Veneers * Crowns and Bridges * Braces
* Root Canal Therapy * Dental Implants
* Fillings * Extractions * Dental Cleanings
* Zoom Whitening * Mouth-guards
* Dentures * Bad Breath Prevention
* Oral Home Care Instruction

Dundas Dental Centre
29C Dundas Street E. Mississauga,
Ont., L5A 1V9 (Hurontario/Dundas)
Phone **905- 281-0273**
Fax: (905) 281-8792

Bovaird Dental Centre
10025 Hurontario St. Unit 12
Brampton, Ont. ,
(Hurontario/Bovaird Dr.)
Phone **905 -846-9929**



திருவருட்செல்வர் விழா-2016 படங்கள் சில